# VIOLENCE AGAINST WOMEN AND REASONS: A SOCIOLOGICAL STUDY BASED ON KATTANKUDY POLICE RECORD.

**Nazeera. J.F**

Assistant Lecturer in Sociology, Faculty of Arts and Culture, South Eastern University of Sri Lanka.
nazeera19941118@gmail.com

*Violence against women is one of the major social issues being addressed in the world nowadays. Based on the data recorded in the Kattankudy police division. It is observed that violence against women is increasing every year. Although NGOs and INGOs are taking steps to reduce these crimes. It is difficult to reduce them altogether. Therefore This Study aims to analyze the Reasons for women Discrimination under the Kattankudy Police Division areas. Qualitative and Quantitative method have been used to collect the data for this research. Forty questionnaires were issued by simple random Sampling method. Six interviews and one focus group discussion were conducted. Findings show that the factors of the women violence increase drugs abuses, family issues, women behavioral changes, uneducated for gender related study, pre age love and other challenges were identified. Finally this study prescribe some suggestions to government and civil society organizations to reduce women discrimination on society.*

**Keywords**: Psychological challenges, Self-behavior, Social Conflict, Un-education of Gender, Woman Discrimination

**அறிமுகம்**

குடும்பம் வன்முறைகளில் இருந்து பாதுகாப்பு பெறும் இடமாகவும், வாழ்வாதாரத்தை உறுப்பினர்களுக்கு வழங்கும் இடமாகவும் கொள்ளப்படுகின்றது. Ammerman குறிப்பிடுகையில், மிக அடிப்படையான சிக்கல் வாய்ந்த தீவிரமானதொரு அமைப்பே குடும்பம் என்கிறார் (Hersen, 1988). சமூகத்தில் நிலையாக காணப்பட வேண்டிய குடும்பங்கள் இற்றைக்கு தன் நிலைத்திருப்பிற்கு சவாலாக பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொள்கின்றது. கடந்த மூன்று தசாப்த காலமாக சிவில் யுத்த அச்சுறுத்தலுக்கு உள்ளாகிய இலங்கையானது தற்போது பெண்கள் தொடர்பான வன்முறை மற்றும் துஷ்பிரயோகங்களுக்கு எதிராக தனது பதாதைகளை சுமந்கின்றது.

எந்தவொரு பெண்ணும் விரும்பத்தகாத பாலியல் ரீதியான தொடுகைகள், பாலியல் ரீதியான விண்ணப்பங்கள், வாய்மொழழ மூலமான உடலியல் ரீதியான செய்கைகள் அல்லது ஒருவருக்கு அவமானம், வெறுப்பு, அசௌகரியத்தை ஏற்படுத்தக் கூடிய எந்தவொரு செயற்பாடும் வன்முறை என்பவற்றில் உள்ளடங்கும் (UNFPA, 2017). பெண்களுக்கெதிரான வன்முறை எனும் போது உடல், உள , பாலியல், உணர்வு ரீதியாக தவராக நடத்துகின்ற, அச்சமூட்டுகின்ற அல்லது ஆதிக்கம் செலுத்துகின்ற ஒரு நடத்தையாகும். வீட்டு வன்முறையானது தீவிரமான பொருளாதார, சுகாதார, சமூக பிரச்சினையாகவும் இதில் பெண் அதிகளவில் பாதிக்கப்படுகிறாள் எனவும் ‘போக்கர்’ (Bowker) குறிப்பிடுகிறார் (Fidkelhor, 1988).

2013ம் ஆண்டு லண்டன் பாடசாலையில் மேற்கொண்ட ஆய்வின்படி, 80 நாடுகளில் வன்முறையானது 35% நடைபெறுவதோடு பெண்களுக்கு எதிராக அவர்களது துணைவராலும், பாலியில் ரீதியாகவும் இடம் பெறுகின்றது. மேலும் வீட்டு வன்முறையானது உயர் வருமானம் பெறும் நாடுகளில் 23.2% ஆகவும், மேற்கு பசுபிக் நாடுகளில் 24.6% ஆகவும், கிழக்கு ஆசிய நாடுகளில் 37% ஆகவும், தென்கிழக்கு ஆசிய நாடுகளில் 37.7% ஆகவும் காணப்படுகின்றது (UNICEF, 2000).

இலங்கையில் நகர்ப்புறங்களில் 20% ஆகவும், கிராமப் புறங்களில் 16% ஆகவும், 17% வன்முறைகள் தோட்டப்புறங்களில் ஏற்படுகின்றது என்றும், மட்டக்களப்பு, கிளிநொச்சி மாவட்டத்தில் 50% ஆகவும், அம்பாந்தோட்டை, அநுராதபுரம், மொனராகலை மாவட்டங்களில் 8% ஆகவும் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் பதிவு செய்யப்பட்டுள்ளன (www.statistics.gov.lk 17 Aug 2018). மேலும் 24% பெண்கள் குடும்ப கௌரவத்திற்காகவும், 12% வன்முறை மேலும் அதிகரிக்கும் என்ற பயத்தினாலும் 43% பெண்கள் வெட்க உணர்வினாலும் வன்முறை தொடர்பாக கூற முடியாத நிலை ஏற்படுகின்றது என எடுத்துக்காட்டப்படுகின்றது (CENWOR 2011).

இதுபோன்று பெண்களுக்கெதிரான வன்முறையானது காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் பல்வேறு கோணங்களில் அதிகரித்துள்ளமையை காத்தான்குடி பொலிஸ் நிலையத்தில் பதிவு செய்யப்பட்ட தரவுகளை அடிப்படையாகக் கொண்டு கண்டுகொள்ளலாம். இத்தகைய வன்முறைகள் இடம்பெறுவதற்கான காரணங்கள் யாது என்பதை எடுத்துக்காட்டுவதாக இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## 2. ஆய்வுப் பிரதேசம்

கிழக்கிலங்கையில் மூவின மக்களும் வாழும் ஒரு மாவட்டம் தான் மட்டக்களப்பு மாவட்டம். மட்டக்களப்பு மாவட்ட காவல் பிரிவின் கீழ் அமைந்துள்ள காவல் நிலையமே காத்தான்குடி காவல் நிலையமாகும். மஞ்சந்தொடுவாய் பிரதேசத்தில் அமைந்துள்ள காவல் நிலையத்தின் கண்காணிப்பில் மட்டக்களப்பு – களுவாஞ்சிக்குடி பிரதேசங்கள் வரையில் அமைந்துள்ள பகுதிகளே பொறுப்பாக காணப்படுகின்றன.

## 3. ஆய்வுப் பிரச்சினை

வளர்ச்சியடைந்து வரும் நாடுகளில் சமூகப்பிரச்சினைகளும் அதன் தாக்கங்களும் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டு வருகின்றமை பாரிய சவாலாக மாறிக் கொண்டு வருகின்ற அதே வேலை பால்நிலை ரீதியான பிரச்சினைகளும் வேறுபாடுகளும் இடம்பெறுவதாக பொறுப்பான காவல் நிலையங்களில் முறைப்பாடுகள் பதிவு செய்யப்படுகின்றன. இவற்றை முடிவுக்கு கொண்டுவர அரசு மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் தனியாகவும், ஒன்றிணைந்தும் பல்வேறு திட்டமிடல்களையும் நடவடிக்கைகளையும் முன்னெடுத்து வருகின்ற போதிலும் ஆண்டுக்காண்டு பதிவு செய்யப்படுகின்ற பெண்கள் தொடர்பான வன்முறையும் அதன் வடிவங்களும் அதிகரித்துக் கொண்டே செல்கின்றன. பெண்கள் வன்முறையை குறைக்கும் செயற்பாடுகள் சமூகத்தின் மத்தியில் முன்னெடுக்கப்படுகின்ற போதிலும் பெண்கள் வன்முறைகள் ஏன் அதிகரித்துக் கொண்டு செல்கின்றன என்பதே இவ்வாய்வின் பிரச்சினையாக அடயாளம் காணப்பட்டுள்ளது.

## 4. ஆய்வின் நோக்கம்

காத்தான்குடி பொலிஸ் பிரிவின் கீழ் அமைந்துள்ள பகுதிகளில் பெண்களுக்கெதிரான வன்முறைகளையும் அவற்றிற்கான காரணங்களையும் கண்டறிதல்.

## 5. ஆய்வு முறையியல்

இவ்வாய்வு பண்புசார், அளவுசார் முறையை கொண்டமைந்துள்ளது. முதலாம் நிலைத்தரவு மற்றும் இரண்டாம் நிலைத்தரவுகள் சேகரிக்கப்பட்டுள்ளன. முதலாம் நிலை தரவு சேகரிப்பு முறையில் எளிய எழுமாற்று மாதிரி அமைப்பினை கையாண்டு தெரிவு செய்யப்பட்ட 08 பிரதேசங்களில் ஒரு பிரதேசத்திற்கு 5 என்ற அடிப்படையில் 40 வினாக்கொத்துக்கள் ஆய்வாளனுடைய வசதிக்கு ஏற்ப காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளிலுள்ள மக்களிடம் வழங்கப்பட்டு தரவுகள் சேகரிக்கப்பட்டுள்ளன. காத்தான்குடி பிரதான பொலிஸ் அதிகாரி, பெண் மற்றும் சிறுவர் பிரிவுக்கு பொறுப்பான பெண் பொலிஸ் அதிகாரிகள் 02 நபர்கள், பிரதேச செயலகத்தின் பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர் 03 பேர் மற்றும் பொதுமக்கள் 4 பேர் உட்பட மொத்தமாக 10 பேர்களிடம் தனியான நேர்காணல் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இரண்டாம் நிலை தரவு சேகரிப்பு

முறையில் 2014-2017 வரையான காத்தான்குடி பொலிஸ் அலுவலக ஆண்டறிக்கை, பெண்கள் வன்முறை தொடர்பாக எழுதப்பட்டுள்ள நூல்கள், ஆய்வுக்கட்டுரைகள் என்பவற்றின் மூலமாக தகவல்கள் திரட்டப்பட்டு ஆய்விற்காக பயன்படுத்தப்பட்டுள்ளன. பெறப்பட்டுள்ள தகவல்கள் அனைத்தும் பண்புசார் மற்றும் அளவுசார் பகுப்பாய்வு முறையின் மூலம் பகுப்பாய்வு செய்யப்பட்டு முடிவுகள் பெறப்பட்டுள்ளன.

## 6. முடிவுகளும் கலந்துரையாடலும்


பால்நிலை சமத்துவமும் சம அந்தஸ்தும் பேசப்படுகின்ற ஒன்றாக காணப்படுகின்ற போதிலும் அவற்றை நடைமுறைக்கு கொண்டுவருவதில் பாரிய சவால்கள் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. பாரிய அளவில் இழப்புகளை சந்திக்கின்ற சமூகமாக பெண்கள் காணப்படுகின்றனர். வீட்டு வன்முறை, தொழில், கல்வி, பாலியல், பௌதீக மற்றும் உளவியல் ரீதியானவை என்றவாறாக பல்வேறு வன்முறைகள் பெண்களுக்கெதிராக அரங்கேருகின்றன. காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிரதேசங்களில் வாழ்கின்ற மக்கள் மத்தியில் இது போன்ற பெண்களுக்கெதிரான வன்முறைகள் எழுந்துள்ளன. அவற்றுள் எண்ணலவானதே பதிவு செய்யப்பட்டவையாகவும் சில வன்முறைகள் பதிவு செய்யப்படாமல் குடும்பங்களிற்குள் மறைமுகமாக பேணுவதாகவும் காணப்படுகின்றன. பொலிஸ் அதிகாரிகளிடம் மேற்கொள்ளப்பட்ட நேர்காணலின் போது அவர்கள் தெரிவிப்பதானது,

''சில வீடுகளில் பெண்கள் தாய், தகப்பன் மற்றும் கணவனாலும் அதிகளவில் தாக்கப்படுவதுண்டு. ஆனால் அவர்கள் வெளியில் எவரிடமும் கூறுவது கிடையாது. அவ்வாறு கூறுவதால் அவர்களுக்கு எதுவும் ஆபத்து நிகழ்ந்திடக்கூடும் என்று பயப்படுகின்றனர். இதுதவிர அவர்களது நிலைமையினை வேறு எவரின் மூலமாவது அறிந்து கொண்டு விசாரித்தாலும் அவ்வாறு எதுவும் நிகழவில்லை என தெரிவிக்கின்றனர்''.

மேலும் இக்கருத்து தொடர்பாக மற்றுமொருவர் கூறுகையில்,

''சமூகத்தில் நிகழும் வன்முறைகள் எத்தகையது என்பதை அறிந்து அவற்றை நாம் முடிவுக்கு கொண்டுவர வேண்டுமாயின் சமூகத்தில் பெண்கள் அவர்களுக்கு நிகழும் வன்முறைகள் தொடர்பாக மிகத் தெளிவாகவும் தைரியமாகவும் முறைப்பாடு செய்தல் வேண்டும். அவ்வாறு முறைப்பாடுகள் செய்யத் தவருகின்ற போது மேலும் இது போன்ற வன்முறைகள் தொடர்ந்து இடம்பெறுவதற்கும் குற்றவாளிகள் அதிகரிப்பதற்கும் இதுவே காரணமாகின்றது''

இவ்வாறான கருத்துக்களை வைத்து அவதானிக்கையில் குறித்த ஒரு சூழலில் பெண்களக்கு எதிராக வன்முறை இடம்பெறுகின்றது எனின் அதற்கு பிரதான காரணமாக சமூகமே அமைந்துள்ளது எனவும் குற்றங்களை மறைப்பதும், குற்றவாளியை தண்டனையில் இருந்து தப்பிக்கச் செய்வதும் பிரதான காரணமாகின்றன. இவ்வாய்வு மேற்கொள்வதற்கு முன்னெடுக்கப்பட்ட வினாக்கொத்து பகுப்பாய்வுகளின்படி, பெண்களுக்கு எதிராக இடம்பெறும் குற்றங்களாக பின்வருகின்றவையை மக்கள் தெரிவிக்கின்றனர்.





மூலம்: வினாக்கொத்து பகுப்பாய்வு

n = 40

வரைபின் அடிப்படையில் நோக்கும் போது, குறித்த பொலிஸ் பிரிவின் கீழ் அதிகூடுதலாக பௌதீக ரீதியாகவே பெண்கள் அதிகளவு தொந்தரவு மற்றும் விளைவுகளுக்குள் உள்வாங்கப்படுகின்றனர் எனலாம். குறிப்பாக 34 வீதமானவர்கள் பெண்கள் எதிர் நோக்கும் வன்முறையில் உடலியல் ரீதியாக காயம் ஏற்படுத்தப்படல், அடித்தல், சித்திரவதையை அனுபவித்தல் போன்றவற்றிற்கு முகங்கொடுக்கின்றனர். நேர்காணலின போது பாதிக்கப்பட்ட பெண் ஒருவர் குறிப்பிடுகையில்,

"தாய் வெளிநாட்டிலிருந்து பணம் அனுப்புகிறார். தந்தை தொழில் எதுவும் செய்வது கிடையாது. இரு தங்கைகள் மற்றும் ஒரு தம்பி உட்பட மூவர் கல்வி கற்கின்றனர். இருப்பதற்கு ஒழுங்கான வீடும் கிடையாது. ஆனபடியால் மாதாந்த செலவு போக ஏனைய பணத்தை சேமித்து வரும் போது தந்தை குடிப்பதற்காகவும் வீணான செலவிற்காகவும் வழுக்கட்டாயமாக கேட்டு ஒவ்வொரு முறையும் அடிப்பார். இதை சகோதரர்கள் தட்டிக்கேட்டால் அவர்களுக்கும் அடிப்பார். நாங்கள் பயத்தில் எவரிடமும் இது தொடர்பாக கூறியது கிடையாது".

இதனடிப்படையில் பார்க்கும் போது தந்தையே மக்களிற்கு உடலியல் ரீதியாக காயங்களை ஏற்படுத்தக்கூடியவராக காணப்படுகின்றார். மேலும் பொலிஸ் நிலையத்திலிருந்து பெறப்பட்ட தரவுகளின் அடிப்படையில்,




மூலம்: காத்தான்குடி பொலிஸ் நிலைய அறிக்கை

பதிவு செய்யப்பட்ட வழக்குகளின் அடிப்படையில் 2014ம் ஆண்டு அடித்தல் மற்றும் காயமேற்படுத்தல் ரீதியாக 2 குற்றங்களே பதிவு செய்யப்பட்டுள்ளன. அதே சமயம் 2015ம் ஆண்டு 18 குற்றங்களும் 2016ம் ஆண்டு 19

குற்றங்களும் 2017ம் ஆண்டு 25 குற்றங்களும் பதிவு செய்யப்பட்டுள்ளன. இவற்றினை அவதானிக்கையில் குறிப்பிட்ட 4 வருடங்களிற்குள் பெண்களுக்கு எதிராக அடித்தல் தொடர்பாக பதிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே சென்றுள்ளன. இது தொடர்பாக குறித்த பெண்கள் பிரிவு பொலிஸ் அதிகாரியின் கருத்தானது பின்வருமாரு அமைந்திருந்தது,

''பெண்கள் தொடர்பான பிரச்சினைகளில் அடித்தல், கை, கால் முறிதல் மற்றும் அரைதல் போன்ற பல்வேறு வழக்குகளும் முறைப்பாடுகளும் முன்வைக்கப்படும். தொடர்ந்து விசாரணை ஏற்பட்ட பிற்பாடு குறித்த நபர்களே தாங்கள் வழக்கினை இரத்து செய்வதாகவும் இது பாரிய அளவில் பேசப்படும் எனவும் அஞ்சுகின்றனர். குடும்ப உறுப்பினர்கள் மற்றும் அயல் வீட்டாளர்களுடன் ஏற்படுத்தப்படும் பிரச்சினைகளிலும் இது போன்ற நிகழ்வுகள் ஏற்படுவதுண்டு''

என்று கூறினார். பெண்களுக்கு அடித்து காயம் ஏற்படுத்துபவர்களில் அதிகளவானர்கள் ஆண்கள் அல்ல. பெண்களே பெண்களுக்கு இவ்வாறான விளைவுகளை ஏற்படுத்துவதுண்டு. அதுமட்டுமன்றி குறித்த ஆய்வுப்பிரதேசத்தில் அதிகமான பெண்கள் வீட்டிலே தங்களுடைய வாழ்நாளை கழிப்பவர்களாகவும் குடும்பத்தை அண்டியவர்களாகவும் காணப்படுவர். அவர்களிடையில் ஏற்படும் முரண்பாடானது பல விளைவுகளை ஏற்படுத்துவதுண்டு. இறுதியில் பெண்களினுடைய முரண்பாடானது ஆண்கள் தலையிடும் அளவு சண்டையாகவும் மாறும். இதுபோனற் காரணங்களும் பெண்கள் வன்மறை ஏற்பட ஏதுவான காரணியாக அமைந்துள்ளன. தொடர்ந்து பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர் தாங்கள் சமாளிக்கும் வழக்குகளில் பின்வரும் வழக்குகளும் காணப்படும் என தெரிவித்தார்,


'' அதிகமான பெண்கள் குடும்பங்களில் ஏற்படும் முரண்பாடுகளினாலும், மாமியார் மருமகளிடையே ஏற்படும் பிரச்சினைகளாலும், அயலவர்களுடன் ஏற்படும் கருத்து வேறுபாடுகளினாலும் வாக்குவாதம் உண்டாகும் போது அவை சண்டையாக உருவாகி அடித்து காயம் ஏற்படுத்தும் அளவிற்கு மாறுகின்றன. இது தவிர பொது வேலி மற்றும் கொடுக்கல் வாங்கல், முறையற்ற சீட்டு முறை, கணவன் கூறுவதை மனைவி கேட்டால் பெண்ணின் குடும்பங்களில் ஏற்படும் பிரச்சினைகளும் சமூகத்தில் ஏற்படுத்துகின்றன. இதன்போது பாதிக்கப்படும் பெண்கள் குரலற்றவளாகவே காணப்டுகிறாள்'' என தெரிவித்தார்.

சமூகத்தில் அதிகளவில் காணப்படும் மற்றுமொரு சிக்கலான விடயமாக பாலியல் ரீதியான செயற்பாடுகளும் தொந்தரவுகளும் அமைகினறன.. குறிப்பாக மனைவியாக இருந்தாலும் ஒரு பெண்னை ஆண் வலுக்கட்டாயமாக வன்புணர்வுக்கு தூண்டுவதும் பாலியல் ரீதியான பிரச்சினைக்குள் உள்ளடங்குகின்றன. பெரும்பாலான சமூகத்தின் பார்வையில் பாலியல் உறவுக்கு மாத்திரம் பெண்னை கட்டாயப்படுத்தல் மாத்திரம் தான் பாலியல் துன்புறுத்தலில் உள்ளடங்கும் என்பதாகும். ஆனால் இன்றைய பெண் உரிமைச் சட்டத்தின் படி, ஒரு பெண்ணை தகார வார்த்தையால் பேசுவது, உடல் உறுப்புக்களால் சைகை செய்வது, ஆபாசப்படங்கள், காணொலி மற்றும் ஒலிகளை எழுப்புவது முதல் எத்தணிப்பது வரையிலான அனைத்து விடயங்களும் பாலியல் ரீதியான வன்முறைக்குள் உள்ளடங்கும் விடயங்களாக கணிக்கப்படுகின்றன.

''இன்றைய சூழலில் பெண்கள் ஏனைய நபர்களால் பாதிக்கப்படுவதை விட தங்களது குடும்ப உறுப்பினர்களாளே அதிகம் விளைவுகளுக்குள்ளாகின்றனர். கடந்த ஆண்டு 18 வயதுடைய பெண்ணை சித்தப்பா கர்ப்பமாக்கிய குற்றம் கண்டுபிடிக்கப்பட்டது. குடும்ப உறுப்பினர்கள் வெளியில் தெரிந்தால் குடும்ப பெயர் கெட்டுவிடும் என்று குற்றத்தை மறைத்தனர். பின்பு அருகிலுள்ளவர்களின் முறைப்பாட்டிற்கு இணங்கவே குற்றம் கண்டுபிடிக்கப்பட்டது. இங்கு பெண்களுக்கெதிரான குற்றங்கள் இடம்பெற்றாலும் அதை தடுக்க எவரும் தயார் நிலையில் இல்லை''

என்று நேர்காணலில் பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர் தெரிவித்தமையை வைத்து அவதானிக்கையில் வன்முறை இடம்பெறுவதையும் குற்றவாளிகளையும் வெளியுலகிற்கு எடுத்துக்காட்டாமல் மறைப்பதும் ஒரு வகைக்

காரணம் என வரையறை செய்யலாம். வினாக்கொத்து பகுப்பாய்வின்படி, 30 விகிதமான கருத்தானது பாலியல் ரீதியாக பெண்களுக்கு குற்றங்களும் வன்முறைகளும் இழைக்கப்படுகின்றன என எடுத்துக்காட்டப்படுவதற்கிணங்க காத்தான்குடி காவல் நிலைய 2014-2017 வரையான தரவானது பின்வருமாறு எடுத்துக்காட்டப்படுகின்றது.




மூலம்: காத்தான்குடி பொலிஸ் நிலைய அறிக்கை

மேற்காட்டப்பட்ட வரைபினை அவதானிக்கையில் 2014, 2015ம் ஆண்டு 4 குற்றங்களும் 2016ம் ஆண்டு 7 குற்றமாக அதிகரித்து 2017ம் ஆண்டு 1 குற்றமே பதிவு செய்யப்பட்டுள்ளன. இவற்றினை அவதானிக்கையில் சமூகத்தின் மத்தியில் குற்றங்கள் அதிகரித்து வரும் வேலையில் பதிவு செய்யப்பட்ட குற்றங்களானது குறைவாகவே காணப்படுகின்றன. இது தொடர்பாக காவல் பொறுப்பதிகாரியிடம் வினா எழுப்புகையில்,

> "ஏனைய குற்றங்களை தெளிவாக முறைப்பாடு செய்பவர்கள் பாலியல் ரீதியான குற்றங்களை முறைப்பாடு செய்ய முன்வரமாட்டார்கள். நாங்கள் அவர்கள் மத்தியில் தெளிவினை ஏற்படுத்தினாலும் பிரச்சினையை பெரிதுபடுத்தாமல் விடுமாரு விலகி விடுவர். இருப்பினும் பதிவு செய்யப்பட்ட இக்குற்றங்கள் அனைத்தும் பாரிய அளவில் விளைவினையும் உடல் சேதத்தினையும், உயிரிழப்புக்களையும் ஏற்படுத்திய குற்றங்களே தவிர சாதாரணமான குற்றங்கள் கிடையாது. அவர்களாக விரும்பினாலும் குறித்த குற்றத்தினை மறைக்கவும் மறுக்கவும் இயலாததாகும்"

என தெரிவித்தார். இது தவிர ஆட்டோ சாரதிகள் பாடசாலை மற்றும் வகுப்புகளிற்கு ஏற்றிச்செல்லும் மாணவிகளிடம் கைச்சேட்டை புரிதல், கணவனின் சகோதரர்கள் அவர் வீட்டில் இல்லாத நேரம் பார்த்து வீட்டிற்கு வந்து தகாத முறையில் நடத்தல், ஆண் சகோதரர்கள் இரவு வேலையில் மது அருந்திவிட்டு வீடு வந்து தங்கைகளிடம் தவறாக நடத்தல், தாயின் இரண்டாம் கணவன்(மறுமணம்) அவரிற்கு பிறக்காத மனைவியின் பெண் பிள்ளையிடம் தவராக நடத்தல், வீதியால் பயணிக்கையில் தவறான வார்த்தை மற்றும் செய்கைகளை காட்டுதல், வயது முதிர்ந்த ஆண்கள் பாடசாலை மாணவிகளிடம் தங்களினுடைய உறுப்புக்களை காட்டுதல் மற்றும் பாலியல் அச்சுறுத்தல்களை விடுத்தல் போன்ற இன்னும் பல்வேறு நிகழ்வுகளும் நடைபெறுகின்றன.

இது தவிர பெண்களை காதலிப்பதாகக் கூறி அவர்களுடன் பாலியல் உறவுகளை மேற்கொண்ட பின்பு அவர்களை திருமணம் முடிக்காமல் ஏமாற்றல், களவு எடுப்பதற்காக வருபவன் குறித்த வீட்டில் பெண் உறங்கிக் கொண்டிருக்கும் போது அவளுடைய கை, கால், வாயை கட்டிவைத்து பாலியல் வன்புணர்வை மேற்கொண்டும் களவெடுத்துச் செல்லும் நிகழ்வுகள் போன்றன குறித்த இவ்வாய்வு பிரதேசத்தில் இடம்பெறுவதாக ஆய்வின் முடிவில் கண்டறியப்பட்டுள்ளன.

நேர்காணலின் முடிவுகளில் இருந்து பெறப்பட்ட மற்றுமொரு விடயமானது,

"சொத்துக்கள் தொடர்பாக பெண்களுக்கு இடம்பெறும் அநீதிகளும் அவை தொடர்பான நடத்தைகளுமாகும். எவ்வாறெனில் குறித்த பெண்பிள்ளைக்கு என்று உரித்துடைய சொத்துக்களை அவருடைய தாய் தந்தை இறந்ததன் பிற்பாடு அவளுடைய உறவினர்கள் பிள்ளையை வளர்ப்பதன் மூலம் பெற்றனர். பின்பு அந்த பெண் தன்னுடைய சொத்துக்கள் தொடர்பாக வினவிய போது

முதன்முதலில் பிரச்சினை ஆரம்பமானது. இறுதியில் குறித்த பெண்ணை உளவியல் ரீதியான தாக்கங்களுக்குள்ளாக்கி மனநல காப்பகத்தில் வைத்து பராமரிக்கும் நிலை உருவாகியுள்ளது. இது தவிர உடன் பிறந்த சகோதரர்கள் தனது சகோதரியின் செத்திற்காக அவர்களுடன் சண்டையிடுவதும், காணி தொடர்பான பிரச்சினை, பொது வேலி பிரச்சினை மற்றும் திருமண ஒப்பந்தத்தின் போது புதிய வீடு மற்றும் தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்தி தருவதாக ஒப்புதலளித்து பின்பு முடியாது போனமையால் மாமியார் வீட்டால் ஏற்பட்ட முரண்பாடு போன்றவைகளால் வாழ்வினை இழந்து கூட பாதிக்கப்படுவது பெண்களாகத்தான் உள்ளனர்'' என்கின்றார்.

இவை தவிர பதிவு செய்யப்பட்ட ஏனைய பெண்கள் வன்முறை தொடர்பான வழக்குகளாக பின்வருவனவற்றினை எடுத்துக்காட்டலாம்,

| **Types of Cases** | **2014** | **2015** | **2016** | **2017** | **2018** |
|---|---|---|---|---|---|
| Fear Tension | - | 3 | | 1 | - |
| Harassment | - | - | - | 2 | 1 |
| Social Media Issues | - | - | - | 1 | - |

மூலம்: சிறுவர் மற்றும் பெண்கள் பிரிவு, பொலிஸ் நிலையம் காத்தான்குடி -2018

மேற்காட்டப்பட்ட அட்டவணையை வைத்து அவதானிக்கும் போது 2017ம் ஆண்டு பயமூட்டல் தொடர்பான குற்றமாக 1 குற்றமும் தொந்தரவு ஏற்படுத்தியமை தொடர்பாக 2017ம் ஆண்டு 2 குற்றமும் 2018ம் ஆண்டு 1 குற்றமும், சமூக வலைத்தள பாவனை தொடர்பான குற்றமாக 2017ம் ஆண்டு 1 குற்றமும் பதிவு செய்யப்பட்டுள்ளன. இவற்றினை வைத்து அவதானிக்கும் போது பதிவு செய்யப்படுகின்ற குற்றங்களின் எண்ணிக்கை குறைவாக காணப்படினும் காவல் நிலையத்தில் பதிவு செய்யப்படாத பல்வேறு வகையான வன்முறைகளும் குற்றங்களும் குறித்த ஆய்வுப்பிரதேசத்தில் இடம்பெற்றுக் கொண்டே இருக்கின்றன. அதுமாத்திரமன்றி தற்காலத்தில் கையடக்கத் தொலைபேசி மூலமாக இடம்பெறும் குற்றங்களாவன அதிகரித்துக் கொண்டே செல்கின்றன. அண்மையில் 2 வருடங்களாக முகநூலில் தெரியாத நபர் பெண்களுடைய தனிப்பட்ட புகைப்படங்கள், காணொலிகள், குறும் செய்திகளை அவர்களுடைய குடும்ப விளக்கத்துடன் அனைவரும் பார்க்கும் வகையிலும் விமர்சிக்கும் வகையிலும் வெளியிடுகின்றனர்.

மேலும் பெண்கள் காதலித்து இடைவிட்டால் குறித்த ஆண் அந்த பெண்ணினுடைய அனைத்து விடயங்களையும் ஏனையவர்களிடமும், அவளினுடைய வீட்டிலுள்ளவர்களிடமும் எடுத்துக்காட்டி பின்பு அவளுடைய வீட்டில் நிம்மதியிழக்கச் செய்தும், வீட்டை விட்டு வெளியேறி சென்று உதவியற்ற நிலையில் கஷ்டப்படுவதும் இச்சூழலிள் சகஜமாக மாறியுள்ளது. கணவன் கடன்பெற்று மீள் வழங்காவிடின் குறித்த வீட்டிற்கு வந்து கடனாளி கடன்பெற்ற ஆணுடைய மைனைவியிடம் தகார முறையில் நடப்பதும், பேசுவதும் சாதாரணமான செயலாக மாறியுள்ளது. மேலும் ஆரையம்பதி பகுதியில் புதிதாக இயங்கிவருகின்ற ஆடைத்தொழிற்சாலைக்கு தொழிலுக்காக செல்லும் பெண்களை தவறாகப் பேசுதல், தவறான நடத்தை கொண்ட பெண் என்று சமூகத்தில் விமர்சித்தல் போன்றனவும் இடம்பெறுகின்றன. அது தொடர்பான குறித்த ஆடைத்தொழிற்சாலையில் பணிபுரியும் பெண்ணொருவரிடம் நேர்காணல் மேற்கொண்ட போது,

''என்னுடைய கணவர் கடன் காரனமாக தொழிற் செய்யாமல் தலைமறைவாக இருந்தார். குடும்ப பராமரிப்பு செலவு கூட இல்லாத நிலையில் உதவுவதற்கு யாரும் இல்லை. இதன்போதே நான் குறித்த தொழிற்சாலைக்கு வேலைக்குச் சென்றேன். பின்பு என் கணவன் விட்டிற்கு வந்து கொலை செய்யும் அளவு துன்புறுத்தி பின்பு விவாகரத்தும் செய்துவிட்டார். காரணம் அவர்களுடைய நண்பர்கள் நான் குறித்த தொழிற்சாலைக்கு வேலைக்கு செல்வது தொடர்பாக தவறாக பேசியமையேயாகும். ஆனால் நான் ஒழுக்கமாகவே உள்ளேன்''

என குறித்த பெண் தெரிவித்ததானது அவர்களுடைய வாழ்க்கைக்கே உத்தரவாதமற்ற தன்மையினை எடுத்துக்காட்டுவதாக அமைந்துள்ளது எனலாம். ஆக சமூகத்தினை பொருத்த வரை ஒவ்வோர் சமூகத்திலும் பெண்களிற்கு எதிரான வன்முறைகள் பல்வேறு கோணங்களில் ஏற்படும். அதுபோன்றுதான் குறித்த ஆய்வுப்பகுதியில் பெண்கள் அவர்களது நடத்தை, பிறரது தவறான பார்வை, விமர்சனம், கஷ்டம், தொழில் மற்றும் சொத்து போன்ற பல்வேறு காரணங்களால் வன்முறைகளுக்குள்ளாகின்றனர்.

**முடிவுரையும் பரிந்துரையும்**

பொதுவாக சமூகத்தில் மிகவும் பலவீனமானவர்கள் என்றும் இலகுவில் பாதிப்புக்குள்ளாகுபவர்கள் என்றும் பெண்களை கூறலாம். அதிலும் பெண்கள் குடும்பத்துடன் நெருங்கியவர்களாகவும் திருமணத்தின் முன்பு தந்தையிடம் பாதுகாப்பையும் தேவையையும் வேண்டி நிற்பவர்களாகவும், திருமணத்தின் பின்பு கணவனிடம் முழு ஆதரவையையும் வேண்டுபவர்களாகவே காணப்படுகின்றனர். எவ்வாறிருப்பினும் ஆணாதிக்கம் கொண்ட சமூக சூழலே நிலவுகின்றது எனலாம். ஆண் என்பவன் எப்பொழுதும் பெண்ணை தனது கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்க விரும்புபவர்களாகவே காணப்படுகின்றனர். பாதுகாப்பும் அரவணைப்பும் பெண்கள் குடும்பங்களினூடாக பெற்றிருந்தாலும் மறுபுறம் சமூகத்தில் பெண்கள் தொடர்பான குற்றங்கள் பல்வேறு கோணங்களிலும் இடம்பெறுகின்றன.

இதனை குறைப்பதற்கு என்று தனியார் மற்றும் அரச நிறுவனங்கள் பல்வேறு உத்திகளை கையாண்டு பெண்கள் சமூகத்திற்கு விழிப்புணர்வூட்டும் செயற்பாடுகளை மேற்கொண்டாலும் ஆண்களால் அவ்வாறான நிகழ்வுகளுக்கு எதிரான கருத்துக்களை தெரிவிக்கும் சூழலே உருவெடுக்கின்றன. குற்றங்கள் இடம்பெறும் போது அவற்றை மறைத்து எதிரகால் சமூகத்தில் தவறுகள் ஏற்படாமல் குற்றவாளிகளுக்கு உரிய தண்டனையை பெற்றுக் கொடுக்க வேண்டிய தேவை காணப்படுகின்றது.

ஒருவரோடு ஒருவர் நெருக்கமாக வாழ வேண்டிய சூழல் அமையப்பெற்றுள்ளமையால் ஏதேனும் சந்தர்பத்தில் முரண்பாடுகள் எற்படவும் அவை பாரிய சர்ச்சையாகவும் உருவெடுக்கும். பெண்கள் பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொள்ள அவர்கள் அடர்த்தியாக வாழ்வதும் பாரிய பங்களிப்பு செலுத்துகின்றன என ஆய்வின் பகுப்பாய்வில் கண்டெடுக்கப்பட்டுள்ளன. ஆக இதுபோன்ற சூழலிள் தாம் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும், தங்களுடைய தவறுகளையும் எவ்வாறு சரிசெய்ய வேண்டும் என்பன தொடர்பான விழிப்புணர்வுகளும் கருத்தரங்குகளும் நடத்தல் அவசியமானது. இது தவிர பெண்கள் எது அவர்களுக்கு எதிராக இடம்பெறும் வன்முறை மற்றும் எவ்வாறான தவறுகள் இடம்பெறும் போது தாம் எவ்வாறு தம்மை பாதுகாத்துக்கொள்ள வேண்டும் என்பன போன்ற அறிவினை பெற்றிருப்பதில் ஒவ்வொரு நபரும் பொறுப்புடையவராக மாற வேண்டும்.

பெரும்பாலும் பெண்களுக்கு ஏற்படும் வன்முறைகளுக்கு பெண்களுடைய நடத்தையும் பேச்சுக்களும் ஒரு வகைக் காரணமாகின்றன. பிறர் எம்மை பாதுகாப்பர் என்பதை விட நாம் முதலில் நம்மை பாதுகாக்கும் செயற்பாட்டிலும், சந்தர்பத்திற்கு ஏற்ப செயற்படும் விதத்திலும் கரிசணை செலுத்தி தங்களுடைய குழந்தைகளுக்கு கூட முறையான பால்நிலை தொடர்பான கல்வி மற்றும் அறிவுரைகளை ஊட்டி தவறுகள் இடம்பெறும் போது அதை சுட்டிக்காட்டும் சமூகத்தவராக மாற வேண்டும். இதுபோன்ற கருத்துக்கள் செயற்பாடுகளை சமூகத்தின் மத்தியில் கொண்டு சேர்க்க வேண்டிய பொறுப்பு அனைவருக்கும் காணப்படுகின்றன எனலாம்.

**உசாத்துணைகள்**

Ammerman, R.T, & Hersen, M. (1990). Case Studeis in Family Violence. Springer Science & Bussiness Media.

Fidkelhor, D. (1988). Stopping family Violence: Research priorities for coming decade. London: Sage publications.

Barnett, O.W. (1997). Family Violence across the life: Spain London Saga Publication.

UNICEF. (2000). Violence against Women. Retrived from:www.statistics.gov.lk.17/Aug/(Accussed on 10th September 2018).

UNFPA. (2017). 2017 Annual Report: Accerlerating & Amplitying Change. Retrived From: womenwatch.unwomen.org/data-Statistics.

வருடாந்த அறிக்கை. (2014 – 2018). சிறுவர் மற்றும் பெண்கள் குற்றப் பிரிவு. பொலிஸ் நிலையம். காத்தான்குடி.

**நேர்காணல்**

| **நேர்காணல்** | **பெயர்** | **இடம்** |
|---|---|---|
| நேர்காணல்- 01 | எஸ். யோகீஸ்வரி | தாழங்குடா |
| நேர்காணல்- 02 | எம். யமுனா | புதுகுடியிருப்பு |
| நேர்காணல்- 03 | எம்.எஸ்.எம். ஜாபீர் | காத்தான்குடி |
| நேர்காணல்- 04 | ஆர்.எம்.எஸ். ரத்நாயக | காவல் நிலையம் |
| நேர்காணல்- 05 | ஏஸ் சீதா | காவல் நிலையம் |
| நேர்காணல்- 06 | எம்.எப் பர்ஸானா | காங்கேயனோடை |